வசதிகளையும் சலுகைகளையும் நீங்கள் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மழை காலங்களில் மின் பணியாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நமது அரசு முக்கியமாக உல்லன் வகை துணிகளாகக் கொடுப்பதோடு மேலும் அவர்களுக்கு ரெயின் கோட், ஓவர் கோட் போன்றவைகள் எல்லாம் கொடுத்து, அவர்களுக்கு என்னென்ன புதிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமோ அவற்றை செய்து கொடுத்து, மேலும் மின்சாரத் துறையில் நீலகிரி மாவட்டம் சிறப்பாக விளங்க மேலும் உதவிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க பாரதம், வளர்க பாரதம், ஜெய் ஹிந்துஸ்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 6-11-1995 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

39. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் வாணிபக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

40. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).